# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>சர்தார் பட்டேலின் 150ஆவது ஜனனதினத்தைக் குறிக்கும் புகைப்படக் கண்காட்சி</u>**

இந்தியாவின் இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் பட்டேலின் 150ஆவது ஜனன தினத்தில் அவரது வாழ்க்கை மற்றும் மரபு ஆகியவற்றை நினைவுகூரும் வகையில் கொழும்பு ஹரோல்ட் பீரிஸ் கலையரங்கில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியை இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.

2. இந்தியாவை மிகவும் உறுதியான பலத்துடன் ஒருங்கிணைத்து, பிளவுபட்டிருந்த தேசத்தினை ஒன்றுபட்ட தேசமாக மாற்றிய இந்திய ஒருமைப்பாட்டின் சிற்பியின் பயணம், நெகிழ்ச்சிப்போக்கு மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றை இக்கண்காட்சி வெளிப்படுத்தியது. சுதந்திர இந்தியாவின் முதல் துணை பிரதமராகவும், உள்துறை அமைச்சராகவும் சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள் பதவி வகித்துள்ளார்.

3. இக்கண்காட்சியை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்திய உயர் ஸ்தானிகர், 500க்கும் மேற்பட்ட சமஸ்தானங்களை ஒருங்கிணைத்து ஒற்றை தேசத்தினை உருவாக்கிய ஒரு தலைவராக சர்தாரின் உயர்ந்த செல்வாக்கு நவீன இந்தியாவிற்கு அடித்தளமிட்டதாக குறிப்பிட்டார். “இன்று நாம் அவரை நினைவுகூரும்போது, பட்டேலின் ஒற்றுமை, வலிமை மற்றும் தேசபக்தி ஆகியவற்றின் இலட்சியங்கள் முன்னைய காலப்பகுதிகளைவிட தற்போது அதிகளவில் எதிரொலிக்கின்றன, இது பொதுவான நோக்கத்தின் நிலைபேறான சக்தியை நமக்கு நினைவூட்டுகின்றது. அவரது பங்களிப்பு அரசியல் எல்லைகளைக் கடந்து வாழ்கின்றமை மட்டுமல்லாமல், தலைமுறைகளை ஊக்குவிக்கும் நெகிழ்போக்கு மற்றும் ஒற்றுமையின் பெறுமானங்கள் மூலமாகவும் வாழ்கின்றன”, எனவும் உயர் ஸ்தானிகர் இங்கு குறிப்பிட்டார்.

4. இக்கண்காட்சியின் ஆரம்ப விழாவில் கல்வியாளர்கள், புகைப்பட சங்கங்கள், நூலக சங்கங்கள் மற்றும் மாணவர்கள் உட்பட ஏராளமான பிரமுகர்கள் கலந்து கொண்டனர். அத்துடன், 2024 ஒக்டோபர் 30 ஆம் திகதி இரவு 7 மணி வரை கொழும்பு லயனல் வென்ட் - ஹரோல்ட் பீரிஸ் கூடத்தில் இக்கண்காட்சி நடைபெறும்.

********

**கொழும்பு**
**29 ஒக்டோபர் 2024**